75

387

# ஒத்தை மாட்டு செக்கும் புகையில்லாத அடுப்பும்



O76111CM3,0
N56
56538

சென்னை கல்வித்துறை வெளியீடு

# ஒத்தை மாட்டு செக்கும் புகையில்லாத அடுப்பும்

[முதியோர் கல்வி—நூல் 5.]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - APR 1957
MADRAS

ச. சந்திரமௌலீஸ்வரன்

சென்னை கல்வித்துறை வெளியீடு.

முதல் பதிப்பு—செப்டம்பர், 1956.

56538

ஈஸ்டர்ன் பிரிண்டர்ஸ், சென்னை-2

# முன்னுரை

குடியாட்சிக்குக் கல்வி அடிப்படை. அக்கல்வி முதியோர்க்கும் தேவை. எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டால் போதாது. மேலும் தொடர்ந்து படிக்க வேண்டும். தொடர்ந்து படிக்க ஏற்ற நூல்கள் தேவை. அவை அதிகம் இல்லை. அவற்றை எழுதத் தனிப் பயிற்சி வேண்டும். அப்பயிற்சி முதியோர் இலக்கியப் பண்ணையில் அளிக்கப்பட்டது. இப்பண்ணை 1955-ம் ஆண்டில் பீளமேட்டில் நடந்தது. இதை நடத்தியது சென்னை அரசாங்கம். உதவியது இந்திய அரசாங்கம்.

இப்பண்ணையில் உருவானது இவ்வெளியீடு. இதைப்போல் வேறு சிலவும் வெளிவருகின்றன. முதியோர் படித்துப் பயன் பெறவேண்டுமென்பது எல்லோருடைய விருப்பம்.

சென்னை,
6-9-1956.

நெ. து. சுந்தரவடிவேலு,
பொதுக் கல்வி இயக்குநர்.

# இதில் உள்ளவை.

பக்கம்

1. ஒவ்வொரு கிராமத்திலும் முன்னேற்ற வேலை ... 1
2. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ... 2
3. மக்களின் உழைப்பு ... 4
4. "எஸ்-இ-ஓ" ... 6
5. "வேடிக்கைக்காகச் சொல்லுகிறீர்கள்" 8
6. நியாயமான பேச்சு ... 19
7. ஒத்தை மாட்டு செக்கு எவ்விதம் சிறந்தது? ... 22
8. "மகன் சூளா" ... 32

# ஒத்தை மாட்டு செக்கும் புகையில்லாத அடுப்பும்

## 1. ஒவ்வொரு கிராமத்திலும் முன்னேற்ற வேலை.

நிலையூர் ஒரு சிறு கிராமம். அங்கே "தேசீய அபிவிருத்தித் திட்டம்" நடை முறையில் இருந்தது. தேசீய அபிவிருத்தித் திட்டத்தைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். அது கிராம வளர்ச்சித் திட்டம்.

நம் சுதந்திர இந்தியாவில் கிராம முன்னேற்றமே அரசாங்கத்தின் நோக்கம். நம் இந்திய சர்க்கார் "ஐந்தாண்டுத் திட்டம்" ஏற்படுத்தி இருக்கிறது. முதல் "ஐந்தாண்டுத்

திட்டம்" முடிந்தது. அதனால் இந்திய கிராமங்கள் சுமார் இருபத்தைந்து சத வீதம் முன்னேற்றம் அடைந்தன.

இந்தியாவில் இலட்சக் கணக்கான கிராமங்கள் உள்ளன. அவ்வளவு கிராமங்களும் எப்பொழுது முன்னேற்றம் அடைவது?

## 2. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்.

அதற்காகவே இரண்டாவது "ஐந்தாண்டுத் திட்டம்" ஏற்பட்டு உள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1956-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமுலில் வந்தது. ஐந்தாண்டுத் திட்டம் கிராமங்களில் நடைமுறையில் கொண்டு வரப்படுகிறது. அதனால் எண்ணற்ற கிராமங்கள் 1961-ஆம்

ஆண்டிற்குள் வளர்ச்சி பெறும். இப்போது "தேசீய அபிவிருத்தித் திட்டமும்" "சமுதாய நலத் திட்டமும்" நடை முறையில் இருக்கின்றன. அவை குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் ஏற்பட்டு இருக்கின்றன.

ஒவ்வொரு கிராமத்திலும் முன்னேற்ற வேலைகள் அதிகரித்தன. புதிய நல்ல சாலைகள், மருத்துவ நிலையங்கள், பாடசாலைகள், கிணறுகள் ஏற்பட்டன. சாக்கடைத் திட்டங்களும், மராமத்து, சமுதாய மன்றக் கட்டிடங்களும் இன்று பல கிராமங்களில் உண்டு. பயிர் செய்ய நூதன முறைகள், வானொலி நிலையங்கள், வாசக சாலைகள் முதலியன எங்கும் உள்ளன. கால் நடைகள் அபிவிருத்தியில்

முன்னேற்றம் அதிகம். குடி தண்ணீர் வசதிகளும், குளிக்கும் அறைகளும், கக்கூசுகளும் சிறு கிராமத்திலும் பரவுகின்றன.

## 3. மக்களின் உழைப்பு.

இவைகளை எல்லாம் அரசாங்கத்தாரே செய்துவிடவில்லை. கிராம மக்களின் ஊக்கமும் ஒத்துழைப்பும் சேர்ந்தே வேலைகள் நடந்தன.

கிராம அபிவிருத்தி வேலைகளைக் கவனிக்க அதிகாரிகளும், கிராமத் தொண்டர்களும் உண்டு. அதிகாரிகள் தங்கள் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு அடிக்கடிப் போவார்கள். கிராமங்களில் கூட்டம் நடக்கும். கிராமத்தார் மூலம் கிராமத் தேவைகள் தெரிய வரும்.

தேவைகளுக்குத் தகுந்த திட்டம் போடுவார்கள்.

கிராம அபிவிருத்தி வேலைகளில் கிராமத்தார் பங்கு எடுத்து உழைப்பர். அரசாங்கம் அவர்களுக்குப் பணம் உதவும். கிராம மக்கள் தங்கள் பங்கை உழைப்பாகவோ அல்லது பணமாகவோ தரலாம். பணம் இருந்தால் மாத்திரம் அபிவிருத்தி வேலைகள் கிராமங்களில் நடந்துவிட முடியாது. மக்களின் உடல் உழைப்பையே அரசாங்கம் பெரிதும் விரும்புகிறது.

எனவே, நம் கிராம முன்னேற்ற வேலைகளில் நாம் அரசாங்கத்தோடு ஒத்து உழைப்போம். ஒத்து உழைப்பதால் நமது கிராமங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொள்வோம்.

# 4. " எஸ்–இ–ஓ "

இத்திட்டத்தில் பல அதிகாரிகள் உண்டு. அவர்களுள் சமூகக் கல்வி அமைப்பாளர் ஒருவர். அவரைக் கிராமத்தார் "எஸ்-இ-ஓ" என்று அழைப்பர். "எஸ்-இ-ஓ" என்பது ஆங்கிலம். சமூகக் கல்வி அமைப்பாளர் என்பது அதன் பொருள்.

அவர் கிராம மக்களிடம் நெருங்கிய தொடர்பு உடையவர். அவர் கிராமங்களில் அடிக்கடி மக்களைக் கூட்டிப் பேசுவார். புதிய அபிவிருத்தி வேலைகளைப் பற்றியும் அவர் விளக்கிக் கூறுவார்.

அவைகளைக் கேட்கும் கிராமத்தாரும் உற்சாகத்தோடு உழைக்க முன்வருவர்.

# காட்சி 1.

நிலேயூர் கிராமத்திற்கு அப்பகுதி எஸ்-இ-ஓ (சமூகக் கல்வி அமைப்பாளர்) வந்தார். அவர் பெயர் தேவராசன். தேவராசனின் நண்பர் நாகன். முதலில் தேவராசன் நாகனேச் சந்தித்தார். நாகன் நல்ல விவசாயி.

தேவராசன்: என்ன நாகு அண்ணு! வணக்கம். சௌக்கியமா?



எஸ்-இ-ஓ நாகனேச் சந்தித்தல்.

நாகன்: நீங்களா! வாருங்கள்! வாருங்கள்! வணக்கம். எனக்கு என்ன குறை? நீங்கள் சௌக்கியமா? வீட்டில் எல்லோரும்......

## 5. "வேடிக்கைக்காகச் சொல்லுகிறீர்கள்."

தேவராசன்: எல்லோரும் சுகமாக இருக்கிறோம். உங்கள் வேலைகள் எல்லாம் எப்படி இருக்கின்றன?

நாகன்: கூடியமட்டும் செய்கிறோம். பேசிக்கொண்டு இருக்கிறேனே! நீங்கள் வந்த வேலையையும் என்ன என்று தெரிந்து கொள்ளாமல்......

தேவராசன்: ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? நான் வேலை

இல்லாமல் உங்களிடம் வருவேனு? வேலைகள் அதிகம் உண்டு. இப்போது இரண்டு நல்ல வசதிகள் புதிதாக வந்திருக்கின்றன. ஒன்று ஒத்தைமாட்டுச் செக்கு. மற்றொன்று புகை இல்லாத அடுப்பு. அவைகளைப் பற்றி உங்களுக்குச் சொல்லவே இன்று இங்கு வந்தேன். நம் நண்பர் எல்லோரும் ஊரில் இருக்கிருர்களா? அவர்களைச் சாவடிக்குக் கூட்டி வாரும். நான் நேராக சாவடிக்குப் போகிறேன்.

நாகன்: (புன்னகையுடன்) இருங்கள் ஐயா, கேலி செய்கிறீர்களா என்ன! ஒத்தைமாடாவது! செக்காவது! புகை இல்லாத் அடுப்பாவது! இவை எல்லாம்

இருக்க முடியுமா? நீங்கள் வேடிக்கைக்காகச் சொல்லுகிறீர்கள் என்று நினைக்கிறேன்.

தேவராசன்: வேடிக்கை ஒன்றும் இல்லை. நான் கூறுவதில் உண்மை இருக்கிறது. அதனை நீங்கள் நன்கு அறிய வேண்டும். அதுவே என் விருப்பம். உங்கள் நல் வாழ்வுக்கு அவை மிகவும் தேவை. சரி, நேரமாகிறது. நீங்கள் சென்று எல்லோரையும் சாவடிக்கு அழைத்து வாருங்கள். எல்லாவற்றையும் அங்கே விவரமாகக் கூறுகிறேன்.

நாகன்: நீர் கூறிய செய்திகள் உண்மையில் எங்களுக்கு நன்மை அளிக்கும். அன்று

எங்களுக்கு ஜப்பானிய பயிர் முறைகளைக் கூறினீர். மேலும் கோழிப் பண்ணை, தேனீ வளர்ப்பு முறைகளையும் விளக்கினீர். நாங்களும் இப்பொழுது ஏதோ செய்ய ஆரம்பித்து இருக்கிறோம். உமக்கு அவை தவிர இன்னும் பல செய்திகள் சொல்ல முடியும் என்று நாங்கள் கண்டு கொண்டோம். இப்பொழுது இன்னும் புதிது புதிதான கருத்துக்களை சொல்லப் போகிறீர்கள். நானே அவற்றைக் கேட்டால் போதாது. நம் ஊரார் அனைவருக்கும் தெரிய வேண்டும். ஐயா, நீங்கள் சாவடிக்குப் போங்கள். நான் போய் எல்லோரையும் அழைத்து வருகிறேன்.

# காட்சி 2.

[தேவராசன் சாவடிக்குப் போகிறார். நாகன் கிராமத்திற்கு நல்ல காலம் வருகிறது என்று தனக்குள்ளே நினைக்கிறார். நாகன் வீடு வீடாகப் போகிறார். ஆண் பெண் ஒவ்வொருவரையும் சாவடிக்கு அழைக்கிறார். ஒவ்வொரு வீட்டாரும் தெருவில் வந்து நின்றனர். நாகனும் கூட்டத்தில் வந்து நிற்கிறார்.]

நாகன்: முத்து, சுப்பையா, முருகா, வீரப்பா! ஏன் எல்லோரும் இங்கு மரம் மாதிரி நிற்கிறீர்கள்? எல்லோரும் சாவடிக்குப் புறப்படுங்கள். பெண்களைக் கூட்டி வாருங்கள். இன்று நம் ஊருக்கு எஸ்-இ-ஓ அண்ணு வந்திருக்கிறார். அவர் சாவடியில்

இருக்கிறார். நமக்கு இன்று அவர் புதிய சங்கதிகள் சொல்லுவார். அவை எல்லாம் நமக்குத் தேவையானவை. வாருங்களப்பா, சீக்கிரம் வாருங்கள். எல்லோரும் வாருங்கள். [இதற்குள் தெருவில் பெரிய கூட்டம் கூடி விடுகிறது.]

முத்து: என்ன நாகண்ணு! உனக்கு வேறு வேலை இல்லையா? நமக்கு எதற்கு இந்த வம்பு? அவர் அடிக்கடி இப்படி வந்து ஏதாவது சொல்லி விட்டுப் போவார். நாம் நம் பெரியவர்கள் வழக்கப்படியே நடப்போம். அதுவே நமக்குத் தகுதி. இப்பொழுது எஸ்-இ-ஓ வந்து என்ன செய்வார்? நம் ஊரைப் புரட்டி விடுவாரா? இது பெரிய மலைப் புரட்டுகிற

வித்தையாக அல்லவா இருக்கிறது. [நாகன் முத்துவைக் கோபத்தோடு பார்க்கிருர்.] இல்லே நாகண்ணு விஷயம் தெரியாமல் கேட்கிறேன். இவர் பேச்சு காலணுவுக்கும் நமக்கு உபயோகப்படாது. இவை எல்லாம் வீண் வேலேகள். கடவுளே நம்புவோம். அவர் விட்ட வழி ஆகட்டும். நாகண்ணு, நீ வேண்டும் என்ருல் எஸ்-இ-ஓ பேச்சைக் கேட்கப் போ. நாங்கள் வரவில்லே.

சுப்பையா: (முத்துவைப் பார்த்து) டேய்! அவசரக் குடுக்கை! நாம் எல்லோரும் இப்படியே பேசிப் பேசியே பொழுதை வீணுக்கி வருகிருேம். வீட்டிலே என்ன வேலே? வீணிலே காலம்

கழிக்கிறோம். இந்த நேரத்தில் சாவடிக்குப் போகலாமே! அங்குப் போய் எஸ்-இ-ஓ என்ன சொல்லுகிறார் என்றுதான் கேட்போமே! அதனால் நம் குடியா முழுகி விடும்? வாங்களப்பா! முருகா, வீரப்பா! நாம் நாக அண்ணனோடு சாவடிக்குப் போவோம். மற்றவர்கள் பெண்பிள்ளைகளைக் கூட்டி வரட்டும் [சுப்பையா எல்லோரையும் அழைக்கிறார்.]


கூட்டத்தினர்: சுப்பையா அண்ணன் சொல்லுவது சரி. அது மனிதன் பேசுகிற பேச்சு. சாவடிக்குப் போய்ப் பார்ப்போமே. அங்கே அந்த ஐயாவின் பேச்சைக் கேட்போம். பிடித்தால் இருப்போம். இல்லை ஆனால்

திரும்பிவிடுவோம். இதில் என்ன தப்பு? வாருங்கள், போவோம். நேரம் ஆகிறது. [எல்லோரும் சாவடிக்குப் போகின்றனர்.]

## காட்சி 3.

[கிராமச் சாவடியில் 'எஸ்-இ-ஓ', கிராமச் சேவகர், கிராமத்தார் அனைவரும் கூடி இருந்தனர். பெண்களும் ஏராளமாக இருந்தார்கள்.]

எஸ்-இ-ஓ: பெரியோர்களே! தாய்மார்களே! வணக்கம். நான் இன்று உங்களிடம் சில புதிய விஷயங்களைச் சொல்ல வந்திருக்கிறேன். நீங்களும் அவற்றைக் கேட்பீர்கள் என எண்ணுகிறேன்.



எஸ்-இ-ஓ பேசுதல்.

ஒத்தை மாட்டுச் செக்கு, புகை இல்லாத அடுப்பு என்பவைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

"காந்தி மகான் 'வார்தா' என்ற கிராமத்தில் இருந்தார். வார்தாவில் 'ஒத்தை மாட்டுச் செக்கு' முதலில் செய்யப்பட்டது. அதனால் அதற்கு, 'வார்தா செக்கு' என்று பெயர்

வந்தது. புகையில்லாத அடுப்பைப் பற்றிப் பிறகு சொல்லுகிறேன். நன்கு சோதனை செய்து பார்த்ததில் அவை நல்ல பலன் அளித்தன. ஆகையால், அவைகளை நமது கிராமத்திலும் ஏற்படுத்தலாம். நாம் நல்ல பலன்களை அடையலாம். என் கருத்து அது. அவைகளைப் பற்றி மேலும் கேட்க உங்களுக்கு ஆசையா? ["விளக்கிச் சொல்லுங்கள்" என்று எல்லோரும் கேட்டார்கள். கூட்டத்தில் ஒரு வாணியன் எழுந்தான் ]

வாணியன்: ஐயா, நான் ஒரு வாணியன். என்னிடம் நாட்டுச் செக்கு ஒன்று இருந்தது. செக்கு ஓட்டும் இரண்டு மாடுகளில் ஒன்று செத்து விட்டது. வேறு மாடு வாங்க என்னிடம் பணம் இல்லை. எனக்கு ஒரு 'ஒத்தை

மாட்டுச் செக்கு' உடனே வாங்கிக் கொடுப்பீரா? எனக்கு இந்த உதவியை நீங்கள் செய்ய வேண்டும்.

எஸ்-இ-ஓ: எல்லோரும் கேளுங்கள். நீங்கள் கிராமங்களில் எள், கடலை, முத்துக் கொட்டை அதிக உற்பத்தி செய்கிறீர்கள் அல்லவா?

## 6. நியாயமான பேச்சு.

கூட்டத்தினர் ஒரே குரலில்: ஆமாம்; ஆமாம்.

எஸ்-இ-ஓ: உற்பத்திப் பொருள்களை என்ன செய்கிறீர்? சொற்ப விலைக்கு விற்கிறீர். ஏதோ பணமும் கிடைக்கிறது. ஆனல் அதிக விலை கொடுத்து

உங்களுக்கு எண்ணெயும், மாடுகளுக்குப் பிண்ணாக்கும் வாங்குகிறீர்கள். நீங்கள் வாங்கும் எண்ணெய் சுத்தமாக இருக்கிறதா? இல்லை. அதுவும் கலப்பு எண்ணெயாகவே இருக்கிறது. அதற்கும் அதிக விலை கொடுக்கிறீர்கள். அதை உபயோகிப்பதால் பல வியாதிகளும் உண்டாகின்றன. எள்ளும், கடலையும் அதிகமாக விளைந்தும் ஏன் நகரங்களுக்கு ஓடி அலைகிறீர்கள்? உங்கள் கிராமத்திலேயே குறைந்த செலவில் சுத்தமான எண்ணெய் கிடைக்கும். அதனால் நல்ல இலாபமும் பெறுவீர்.

கூட்டத்தினர்: நியாயமான பேச்சு. மேலே சொல்லுங்கள்.

எஸ்-இ-ஓ: எண்ணெய் வித்துகளை உற்பத்திச் செய்து நீங்கள் குறைந்த விலைக்கு விற்கிறீர்கள். வாங்கும் மூன்றும் மனிதன்தான் உங்களுக்குச் சேர வேண்டிய இலாபத்தை அடைகிருன். அந்த இலாபத்தை ஏன் நீங்களே அடையக் கூடாது? எண்ணெய் ஆட்டும் தொழிலை இந்தக் கிராமத்தில் நடத்தலாம். உங்கள் விவசாய வேலைகளோடு அதையும் செய்யலாம். வாணியரே அத்தொழிலைச் செய்ய முடியும் என்பது இல்லை. எல்லோரும் செய்யலாம். அதனுல் உங்கள் வருமானமும் பெருகும். உழைப்புக்குத் தக்க வருமானம் பெற நல்ல வழி. இப்பொழுது நீங்களே


சொல்லுங்கள். நான் சொல்லுவதில் ஏதாவது தவறு இருக்கிறதா?

கூட்டத்தினர்: நல்ல யோசனை! மேலான யோசனை! நாமும் செய்து பார்க்கலாமே!

## 7. ஒத்தை மாட்டுச் செக்கு எவ்விதம் சிறந்தது?

கூட்டத்தில் ஒருவர்: ஐயா! உங்கள் "ஒத்தை மாட்டுச் செக்கு", நாட்டுச் செக்கை விட எவ்விதம் சிறந்தது? தயவு செய்து விளக்கமாகக் கூறவேண்டும்.

எஸ்-இ-ஓ: நல்ல கேள்வி. வார்தா செக்கு, நாட்டுச் செக்கை விட உண்மையில் சிறந்ததே. அதற்குக்காரணம் கூறுகிறேன்;



ஒத்தை மாட்டுச் செக்கு.

முதலில் வார்தா செக்கிற்கு வேண்டியது ஒரே மாடு. இரண்டாவதாக ஒரே அளவில் வித்துகளைத் தனித்தனியே இரண்டு செக்குகளிலும் போட்டு ஆட்டுவோம். நாட்டுச் செக்கைவிட வார்தா செக்கில் எண்ணெய் சிறிது அதிகமாகவும் சுத்தமாகவும் கிடைக்கும். இது சோதித்துப் பார்த்து அறிந்த உண்மை.

கூட்டத்தில் ஒரு வாணியன்: அது எப்படி? ஒரே தினுசு வித்தையே இரண்டு செக்கிலும் அளந்து போடுகிறோம். நாட்டுச் செக்கு எண்ணெயைக் குடித்து விடுகிறதா?

எஸ்-இ-ஓ: நாட்டுச் செக்கு எண்ணெயைக் குடிக்கிறது என்று நான் கூறவில்லை! இரண்டும் செக்குகளே. இருந்தாலும் அமைப்பில் அவற்றில் வித்தியாசம் உண்டு. நாட்டுச் செக்கில் உலக்கை சுற்றி வரும். அப்போது செக்கின் உள் பாகத்தில் பிண்ணுக்கு மிகவும் தடிப்பாக இருக்கும். ஏன்?

வாணியன்: செக்கை நெடு நேரம் ஆட்டினுல் எப்படிப் பிண்ணுக்கு தடிப்பாக இருக்க முடியும்?

0-16 MCM3,0
N56



எஸ்-இ-ஓ: எவ்வளவு நேரம் ஆட்டினாலும் நாட்டுச் செக்கில் பிண்ணாக்கு தடிப்பாகவே இருக்கும். அதன் பருமன் குறைய வழி இல்லை. அதற்குக் காரணமும் இருக்கிறது.

வாணியன்: அது என்ன? எங்களுக்குத் தெரியாத புதிய காரணம்?

56538

எஸ்-இ-ஓ: நாட்டுச் செக்கில் உலக்கைக்கும் அதன் உள் பாகத்திற்கும் ஊடே இடைவெளி அதிகம் இருக்கிறது. அதனால் உலக்கை சுற்றி வரும்போது பிண்ணாக்கு உள்ளே தடிப்பாகிறது. எண்ணெய் வித்துச் சத்து முழுவதும் நன்கு அரை படுவதில்லை. ஆனால், 'வார்தா செக்கில்' இந்த

இடைவெளி மிகவும் குறைவு. அதனுல் செக்கின் உலக்கை சுற்றி வரும் போது, பிண்ணுக்கு இலேசாக உள்ளே படியும். எள்ளின் சத்து முழுவதும் வெளி வருகிறது. அதனுல் எண்ணெயும் சிறிது அதிகம் கிடைக்கிறது என்றேன். உங்களுக்கு எண்ணெய் வித்தில் இருந்து அதிகம் வேண்டியது எது? எண்ணெயா? அல்லது பிண்ணுக்கா?

கூட்டத்தில் எல்லோரும்: அதிக எண்ணெய்தான் எங்களுக்கு இலாபம். எண்ணெய் அதிகம் கிடைத்தால் பிண்ணுக்குக் குறையுமே என்று யாருக்குக் கவலே?

வாணியன்: சரி ஐயா! நாட்டுச் செக்கைவிட இதில் எண்ணெய் சுத்தமாகக் கிடைக்கும் என்றீரே! அது எப்படி?

எஸ்-இ-ஓ: அதற்கும் விளக்கம் கூறுகிறேன்; கேளுங்கள். எண்ணெய் சுத்தமாகக் கிடைக்கவே 'வார்தா செக்கின்' அமைப்பில் சில புதிய அமைப்புகள் உள்ளன. நாட்டுச் செக்கில் எண்ணெயைத் துணியால் அவ்வப்போது பிழிந்து எடுக்க வேண்டும். எண்ணெய் தோய்ந்த துணியைக் கையால் எடுத்துப் பிழிகிறார்கள். துணியும் பெரும்பாலும் அழுக்கு ஆகும். பிழியும்போது கைகளில் ஒட்டிய அழுக்கும் சேர்ந்து எண்ணெயில் கலந்து விடும்.

ஆனல், வார்தா செக்கில் அவ்வாறு இல்லை. செக்கின் அடிப்பாகத்தில் ஒரு துவாரம் உண்டு. துவாரத்தில் இருந்து குழாய் வழியே எண்ணெய் நேராக ஒரு மூடிய பாத்திரத்தில் விழுகிறது. கைபடாமல் தானே விழுகிறது. அவ்விதமாக வார்தா செக்கு அமைக்கப் பட்டு இருக்கிறது. வார்தா செக்கின் உள் பாகங்களைத் தனித் தனியே கழற்றி வெளியே எடுக்கலாம். அவற்றைச் சுத்தம் செய்து மறுபடியும் உள்ளே பொருத்தலாம். நாட்டுச் செக்கில் அவை முடியாது. அதனலேயே கைபடாத சுத்தமான எண்ணெய் வார்தா செக்கில் கிடைக்கிறது

என்றேன். புரியாவிட்டால் தயவு செய்து புரியவில்லை என்று சொல்லுங்கள். இன்னொரு தரம் சொல்லுகிறேன்.


வாணியன், கூட்டத்தினர்: ஆகா! மிக நல்ல வழி! நன்ருகப் புரிகிறது. இவ்வளவு வசதிகள் உள்ள செக்கே இனி எங்களுக்கு வேண்டும். அதை நாங்கள் எப்படி வாங்கி அமைப்பது? செலவு அதிகம் ஆகுமோ?

எஸ்-இ-ஓ: நல்ல கேள்வி! அதன் கிரயம் மாடு நீங்கலாக 300, 350 ரூபாய்க்கு மேல் ஆகாது. நீங்கள் அதை வாங்கச் சரியான வழி சொல்லுகிறேன். நீங்கள்

உங்கள் கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக சேருங்கள். உங்கள் தேவைகளைக் கூட்டுறவுச் சங்கம் மூலம் தீர்மானிக்க வேண்டும். பிறகு அதை "அகில இந்திய கிராமக் கைத்தொழில் போர்டுக்கு" அனுப்ப வேண்டும். போர்டின் கிளை ஒன்று சென்னையில் இருக்கிறது. அவ்வாறு செய்யுங்கள். 'போர்டார்' உங்களுக்கு வார்தா செக்கு அனுப்ப ஏற்பாடு செய்வர். வார்தா செக்கு ஒன்று வாங்கினால் 125 ரூபாய் பெறுமான மானியமும் கிடைக்கும்.

கூட்டத்தினர் (வாணியன் உள்பட, உற்சாகமாக) அடே அப்பா! இந்தச் செக்கு வாங்க உதவித் தொகையும் கொடுக்கிறார்களா? பலே! பலே! ஐயா! நீங்கள் தெளிவாகச் சொன்னீர்கள். நாங்கள் மிகவும் திருப்தி அடைகிறோம். எங்களில் 20 பேருக்கு முதலில் இந்த 'வார்தா செக்கு' வேண்டும். அதை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்.

எஸ்-இ-ஓ: அப்படியே செய்கிறேன் ஐயா! உங்களையும் பாராட்டுகிறேன்.



"மகன் சூளா."

# 8. "மகன் சூளா."


கூட்டத்தில் ஒரு பெண்மணி: ஐயா! "புகை இல்லாத அடுப்பு" என்று சொன்னீர்களே? அதைச் சிறிது

விளக்கிச் சொல்லுங்கள். பெண்களுக்கு வேண்டியது அதுதான்.



புகையில்லாத அடுப்பு செய்யும் விதம்.


எஸ்-இ-ஓ: சொல்லுகிறேன் அம்மா! கேளுங்கள்: அந்த அடுப்பு முதலில் 'மகன்வாடி' என்ற கிராமத்தில் செய்யப்பட்டது. காந்திமகான் இருந்த வார்தாவுக்குப் பக்கத்தில்




"மகன் சூளா" அடுப்பு வேலே செய்யும் விதம்.

உள்ளது மகன்வாடி. ஆகையால் அதற்கு "மகன் சூளா" என்று பெயர் வந்தது. "அதில் மூன்று பெரிய துளேகள் தனித் தனியாக இருக்கின்றன. நீண்ட புகைப் போக்கி ஒன்றும் அதில் இருக்கிறது. ஒரே வேளேயில் மூன்று துளேகளின் மேலும் தனித்தனியாக பாத்திரங்கள் வைத்துச் சமைக்கலாம். விறகு வைக்கக் கீழே ஒரு சந்து உண்டு.

விறகைத் துண்டுகளாக வெட்டி கொஞ்சமாக வைத்து தீ மூட்ட வேண்டும். சாதாரண அடுப்பிற்கு வேண்டும் விறகில் பாதி அளவும் இதற்குச் செலவாகாது. விறகு எரியும் சந்திலிருந்து நெருப்பு பரவும். மூன்று துளைகளின் மேல் வைக்கப்பட்ட பாத்திரங்களில் ஒரே சமயத்தில் நல்ல சூடு ஏறுகிறது. நீண்ட புகைப்




"மகன் சூளா" வின் தனித்தனி பாகங்கள்.



"மகன் சூளா" பாகங்கள் இணைத்து காட்டப்பட்டுள்ளது.

போக்கி வழியாக புகையும் வெளியே போகிறது. எனவே முதலாவது, புகையால் கண்களுக்குக் கெடுதல் ஏற்படாமல் தடுக்கலாம். அடுப்பு விலையும் குறைவு, நீங்களே சுலபமாக வீடுகளில் அதை அமைக்க முடியும். மதுரை மாவட்டத்தில் "கல்லுப்பட்டி" என்று ஒரு கிராமம் இருக்கிறது அதில் 'மகன்சூளா' என்னும் அடுப்புகள்

ஏராளமாக உற்பத்தி செய்கின்றனர். அங்கிருந்தும் நாம் இவற்றை வாங்கலாம்.



புகையில்லாத அடுப்பு இயங்கும் விதம்.

கூட்டத்தில் ஒரு பெண்மணி: ஐயா! அவ்வளவு உபயோகமான அடுப்பை எங்கள் கிராமத்தில்

ஒவ்வொருவரும் உபயோகிக்க விரும்புகிறோம். [பெண்கள் எல்லோரும் அவள் கூறுவதை ஆமோதித்தார்கள்] எங்களுக்கு அதை வாங்கிக் கொடுக்குமாறு கேட்கிறோம்.

எஸ்-இ-ஓ: அப்படியே ஆகட்டும் அம்மா.

நாகன்: ஐயா! உங்களுக்கு மிகவும் நன்றி. எல்லோருக்கும் வணக்கம்.

56585

3B
11-57

# சென்னை கல்வித்துறை
# முதியோர் கல்வி வெளியீடுகள்

## மடல்கள்—விலை ஒரு அணு

1. ஆணியும் நிமிஷமும்
2. கேள்வி பதில்
3. இவை ஆகாது
4. நாட்டின் பெருமை
5. கண்டு கற்போம்

## சுவடிகள்—விலை இரண்டு அணு

1. பார்வதிக்கு ஒரே பிள்ளை
2. பெண்ணு? போரா?
3. நல்ல தீர்ப்பு
4. வரப்புத் தகராறு
5. ஊதாரி ராமனும் உழைப்பாளி கந்தனும்
6. சுவேதன்
7. சேவல் சண்டை
8. மந்திரம் இல்லை! மாயம் இல்லை!!
9. ஐயோ! தீ!
10. செவலை நொண்டுகிறது
11. வள்ளுவர் பேசுகிருர்
12. ஒரு இனிப்பான செய்தி
13. புத்தர் வரலாறு
14. வண்ணனும் வண்ணாத்தியும்
15. வண்டி வளர்ந்த கதை
16. எப்படிப் பிறந்தது?
17. எப்படிச் செய்தனர்?
18. மணி என்ன?
19. வசதி வேண்டுமா?
20. பணம் சேர்த்தீரா?
21. முத்தையனுக்கு வழி பிறந்தது
22. வாழும் வழி
23. ராணி மாளிகை
24. பாம்பு கடித்தால்......
25. ஓடி ஒளிந்த ராமன்
26. நகையே வேண்டாம் மச்சான்
27. மனம் மாறுமா?
28. குப்பையே மாணிக்கம்
29. நமது தேசீயக் கொடி
30. வானம்

## நூல்கள்—விலை இரண்டு அணு

1. மின்னலும் இடியும்
2. நீரில் மூழ்கினுல்.........
3. முத்து ரத்தினம்
4. குடை சாய்ந்தது
5. ஒத்தை மாட்டு செக்கும் புகையில்லாத அடுப்பும்
6. பணம் வாங்காத வைத்தியர்

கிடைக்கும் இடம்:

சென்னை அரசினர் அச்சகக் கிளை,
(புத்தக விற்பனை நிலையம்)
166, மவுண்ட் ரோடு. சென்னை-2.